www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

12[TH] STD **முன் மாதிரி முதல் இடைப் பருவத் தேர்வு — 2024**

## கணக்குப்பதிவியல்

நேரம் : 1.15 மணி மதிப்பெண் : 45

### பகுதி — I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 × 1 = 10

1. ஒற்றைப்பதிவு முறையில் -------- கணக்கு மற்றும் பெயரளவு கணக்குகள் பராமரிக்கப்படுவது இல்லை.
   அ) ஆள்சார் ஆ) ரொக்க இ) சொத்து ஈ) கடனீந்தோர்

2. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹. 30,000, பெற்ற ரொக்கம் ₹. 1,00,000, கடன் விற்பனை ₹.90,000; கடனாளிகள் இறுதி இருப்பு ?
   அ) ₹. 30,000 ஆ) ₹. 1,30,000 இ) ₹. 40,000 ஈ) ₹. 20,000

3. தவறான கூற்று எது?
   அ) முழுமைபெறா பதிவுகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிப்பது கடினம்
   ஆ) முழுமைபெறா பதிவேடுகள் அறிவியல் தன்மைகொண்டதால், நம்பகத்தன்மை கொண்டது
   இ) முழுமைபெறா பதிவேடுகள் அனைத்துப் பயனார்களுக்கும் ஏற்புடையது
   ஈ) முழுமைபெறா பதிவேடுகள் தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுமங்களுக்கு பொருந்தக்கூடியது

4. நிலை அறிக்கை ஒரு ----------
   அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

5. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் ---------
   அ) வருவாயினத் தன்மை மட்டும் உடையது ஆ) முதலினத் தன்மை மட்டும் உடையது
   இ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை ----------
   அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு இ) வருவாயினச் செலவு ஈ) முதலினச் செலவு

7. பொருத்துக
   1) சொத்து கணக்கு ---- a. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு
   2) வருவாயின வரவு ---- b. மதிப்பூதியம்
   3) பெயரளவு கணக்கு ---- c. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு
   4) வருவாயின செலவு --- d. சந்தா

   அ) c d a b ஆ) d a b c இ) a b c d ஈ) c a d b

8. பின்வருவனவற்றில் எது இலாபநட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்?
   அ) அலுவலகச் செலவுகள் ஆ) பணியாளர் ஊதியம்
   இ) கூட்டாளியின் ஊதியம் (ஈ) வங்கிக்கடன் மீதான வட்டி

9. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி
   அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
   இ) ஆண்டுக்கு 5 % வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

10. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது----------
    அ) இலாபம் அல்லது நட்டம் ஆ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
    இ) உபரி அல்லது பற்றாக்குறை ஈ) நிதிநிலை



### பகுதி — II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 16- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

11. முழுமைபெறா பதிவேடுகள் என்றால் என்ன?
12. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.
13. கீழ்க்காணும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு மற்றும் கூடுதல் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர்31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தாத் தொகையினைக் கணக்கிடவும்.

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| சந்தா | | | | |
| 2017 | 28,000 | | | |
| 2018 | 1,72,000 | | | |
| 2019 | 12,000 | 2,12,000 | | |

**கூடுதல் தகவல்கள்** : 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹. 8,000

14. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடுக.
    தொடக்க முதல் ₹. 50,000 ; எடுப்பு ₹. 27,000 ; இறுதிமுதல் ₹. 60,000 ; கூடுதல் முதல் ₹. 40,000

15. மணி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ₹. 30,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.
16. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

### பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 3 = 12

17. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?
18. முழுமைபெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?
19. பின்வரும் விவரங்களிலிருந்து, 2018 டிசம்பர் 31 ஆம் நாளைய முதலை கண்டறியவும்

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| 01.01.2018 அன்று முதல் | 50,000 | அவ்வாண்டில் இலாபம் | 3,000 |
| நிதியாண்டில் எடுப்பு | 10,000 | நிதியாண்டில் கூடுதல் முதல் | 17,000 |

20. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் கொள்முதலைக் காணவும் :

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| தொடக்க கடனீந்தோர் | 1,70,000 |
| கொள்முதல் திருப்பம் | 20,000 |
| கடனீந்தோருக்கு செலுத்தியது | 4,50,000 |
| இறுதி கடனீந்தோர் | 1,90,000 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Trb Tnpsc.Com

21. பின்வரும் விவரங்கள் ஒரு விளையாட்டு மன்றத்தின் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ₹ |
|---|---|
| விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (01.4.2018) | 3,000 |
| நடப்பு ஆண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 9,000 |
| நடப்பு ஆண்டில் விற்பனை செய்த பழைய விளையாட்டுப் பொருள்கள் | 500 |
| விளையாட்டுப் பொருள்கள் இருப்பு (31.3.2019) | 4,000 |

22. ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய தயாரிக்கப்படும் கணக்கு எது? அதைப்பற்றி சிறு குறிப்பு வரைக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 3 × 5 = 15

23. அ) 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹. 1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

| விவரம் | தொகை ₹ | விவரம் | தொகை ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹. 30,000 எடுத்துக் கொண்டார்.

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹. 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

**( அல்லது )**

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று பற்பல கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வாராகடன் | 15,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |



24. அ) பூம்புகார் இலக்கிய மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு( 01.4.18 ) | 10,000 | சிற்றுண்டி விற்றது | 3,000 |
| புத்தகங்கள் வாங்கியது | 20,000 | அறக்கொடை நிதி பெற்றது | 4,000 |
| கட்டடம் மீதான தேய்மானம் | 4,000 | வங்கிமேல்வரைப்பற்று ( 01.4.18 ) | 8,000 |
| அச்சு மற்றும் எழுதுபொருள் | 3,000 | வட்டி செலுத்தியது | 6,500 |
| மின்விளக்கு அலங்காரம் | 2,600 | முதலீடுகள் விற்றது | 2,000 |
| பல்வகை வரவுகள் | 1,500 | கொடுபட வேண்டிய சம்பளம் | 4,000 |
| அரசிடமிருந்து பெற்ற மானியம் | 12,000 | வங்கி ரொக்கம் ( 31.3.19 ) | 4,000 |
| சந்தா பெற்றது | 20,000 | காப்பீட்டுமுனைமம் செலுத்தியது | 8,000 |
| பருவ இதழ்கள் வாங்கியது | 5,000 | உயில்கொடை | 9,000 |

**( அல்லது )**

ஆ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | தொகை (₹) | செலுத்தல்கள் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கை ரொக்கம் | 14,000 | சம்பளம் | 20,000 |
| வட்டி பெற்றது | 5,000 | வாடகை | 24,000 |
| சந்தா | 55,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| உயில்கொடை | 48,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| அறைகலன் விற்றது ( ஏட்டு மதிப்பு ₹. 17,000 ) | 16,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| | | இருப்பு கீ/ இ கைரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

25. அ) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

**( அல்லது )**

ஆ) நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com